தினமலர்- 21-10-13

# பொருளாதார கணக்கெடுப்பு துவக்கம்

புதுச்சேரி, அக். 21-

புதுச்சேரி மாநிலத்தில் பொருளாதார கணக்கெடுப்பு பணி தொடங்கியது.

மத்திய அரசு பொருளாதாரம் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகம் சார்பில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை பொருளாதார கணக்கெடுப்பு பணி நடந்து வருகிறது. தற்போது 6வது பொருளாதார கணக்கெடுப்பு நடத்த ஆணையிடப்பட்டுள்ளது.

புதுச்சேரி புள்ளியியல் துறை சார்பில் இக்கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. முதலில் கவர்னர் மாளிகையில் கணக்கெடுப்பு பணி தொடங்கப்பட்டது. புள்ளியியல் துறை இயக்குனர் வைத்தியநாதன், இணை இயக்குனர்கள் ராமகிருஷ்ணன், ஆதிமூலம், ராஜ்பவன் பொறுப்பாளர் பக்கிரிசாமி ஆகியோர் கவர்னர் வீரேந்திர கட்டாரியாவிடம் விபரங்களை சேகரித்தனர். இதேபோல் மாகி, காரைக்கால், ஏனாம் பகுதிகளிலும் கணக்கெடுப்பு பணி தொடங்கியது. புள்ளியியல் துறை அதிகாரிகள் இப்பணியை மேற்கொள்கின்றனர்.

மாநிலம் முழுவதும் மூன்று லட்சத்திற்கும் அதிகமான வீடுகள் உள்ளன. களப்பணியாளர் வீடுகளுக்கு சென்று ஒவ்வொரு வீட்டிலும் எவ்வளவு பேர் உள்ளனர். என்ன வேலை செய்கின்றனர். போன்ற விவரங்கள் சேகரிப்பர். ஆறு மாதங்களுக்குப் பிறகு பின் இவ்விவரங்கள் வெளியிடப்படும்.